கடைகள், நிறுவனங்கள் தொடர்பாகவும், தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் II, III வது அத்தியாயங்கள் செயல்படுவதை நிறுத்தி வைத்தார் :

பண்டிகை	கால அளவு
தீபாவளி	19—9—1971 முதல் 19—10—1971 முடிய இரு நாட்களும் உட்பட
ரம்ஜான்	6—11—1971 முதல் 20—11—1971 முடிய இரு நாட்களும் உட்பட
கிறிஸ்துமஸ், பொங்கல் ..	11—12—1971 முதல் 15—1—1972 முடிய இரு நாட்களும் உட்பட

பெருந்திரளாகப் பொருள்களை வாங்கவரும் பொதுமக்களின் வசதிக்காகவே, முக்கியமாக இவ்வாறு செய்யப்படுகிறது.

Building for Hostels in Sendamangalam

* 627 *Q.*—THIRU C. CHINNA VELLAIYAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to construct separate buildings to Government Boys and Girls Hostels in Sendamangalam, Salem district?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

எஸ். புதுக்கோட்டையிலுள்ள அரிசனங்களுக்குப் பாதை வசதி

* 628 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி வட்டம், எஸ். புதுக்கோட்டை தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய சுடுகாட்டிற்குப் பாதை வசதியே இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், பாதை அமைத்துத்தர மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) பாதை வசதி அளிக்க திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரால் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்பட்டு அது முடியும் தருவாயில் உள்ளது. நில ஆர்ஜிதம் முடிவடைந்ததும் பாதை வசதி அளிக்கப்படும்.

1972 மார்ச் 22]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் புதுக்கோட்டை கிராமத்திற்குப் பல ஆண்டுகாலமாக சுடுகாட்டிற்கு பாதை வசதியில்லாமல் இருக்கிறது. இறந்தவர்கள் மீண்டும் வந்து போராட்டம் நடத்தப் போவதில்லை. இருப்பவர்கள் கேட்டுக் கேட்டு அசந்து விட்டார்கள். ஆகவே, எவ்வளவு விரைவில் அதை முடித்துத் தரமுடியுமோ அவ்வளவு விரைவில் பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த அவசியத்தை உணர்ந்து தான் நில ஆர்ஜிதம் முடிந்து விட்டது, பிறகு அந்தப் பாதை அமைப்பதற்கான வகையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று கூறினேன்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி எடுத்துச் செல்லக் கட்டுப்பாடு

*629 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்குச் சொந்த உபயோகத்திற்காக அரிசி எடுத்துச் செல்ல இருந்து வரும் கட்டுப் பாட்டை நீக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை. ஆனால் தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நெல்–அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆணையின் கீழ் ஒருவர் 10 கிலோகிராம் வரை நெல்லையோ அல்லது அரிசியையோ எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி, எடுத்துச் செல்ல வழி வகை உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, யார் பெயருக்கு நிலத்தின் பட்டா இருக்கிறதோ அவர்களுக்கு மட்டும் சொந்த நிலத்திலிருந்து சொந்த உபயோகத்திற்கு அரிசி எடுத்துச் செல்ல பர்மிட் கொடுக்கப்படுகிறது. சொந்த நிலமுள்ள ஒரு குடும்பத்தில் உள்ள யாருக்கும் அந்த பர்மிட் வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, யார் பேரில் பட்டா இருந்தாலும், அவர் நிலத்திற்கு உரியவர்கள் என்று இருக்கும் பட்சத்தில் தாசில்தாருக்கு விண்ணப்பித்தால் அவர்கள்